உ

கடவுள் துணை.

மானிடக் கீர்த்தனை.

முதற்பாகம்.

சென்னை - சூளை
ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1923

உ

கடவுள் துணை.

மானிடக் கீர்த்தனை.

முதற்பாகம்

இ-ம்-நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

ஆட்டத்தைப்பாரீர்—மானிடபொம்ம
லாட்டத்தைப்பாரீர்

அநுபல்லவி.

நாட்டிலுள்ளோர்களே நயமாகக்கேளுங்கள்
நமலோகம்சேருமுன் நடந்திடும்விபரீத (ஆ)

சரணங்கள்.

ஆணுடன்பெண்கூடும் அதிசயசுரலீலை
அன்புடனேசெய்ய அகமகிழ்ச்சிகொண்டு
தோணிடும்விபரீத சுகத்துக்காசைப்பட்டு
தீராதகாமநோய் வலையிலகப்பட்டு
மன்மதலீலை செய்யநினைந்தவர்
புன்னிடும்வேளை
சுக்கிலசுரோணிதம் சேர்ந்துஉருவமாகி
சுவாமியருளினாலே கால்கைகண்மூக்காகி
பக்கவிலாவெலும்பு பகரும்நரம்பிரத்தம்
பண்பாய்கொழுப்புகளும் சதைகளுமாய்சேர்ந்த(ஆ)

தலைமண்டைமூளையும் தகுந்தபுருவங்களும்
அவராமல்மயிர்நகம் முதுகுடன்காதுகள்
முலைமார்புகழுத்துடன் முகத்தினவயவமும்
முடிந்துபத்துமாதம் வயிற்றிலிருந்தபின்பு
தாய்மெத்தநொந்து மருத்துவச்சிதுணை
யாய்ஓடிவந்தும்
பகவானருளினாலே பாரில்பிறந்தபின்பு
பண்புடன்தாய்தந்தை பிள்ளைபிறந்ததென்ன
மகிழுடன்சுற்றத்தார் தமயன்பாட்டனெல்லாம்
புகழும்படியாய்குவ்வா குவ்வாகுவ்வாவென்ற(ஆ)
அலரி அலரி அம்மம அம்மா அம்மாவென
அன்னைகையிலெடுத்து அன்புடன்பால்தந்து
பலருமகிழ்ந்திட பரிவுடனேணையில்
பாலனைகிடத்தி ஆராரரிவோவென்று
தாலாட்டிஅன்பாய் பசித்திடும்வேளையில்
பாலூட்டிபின்பு
அப்பாமகனேயெந்தன் அய்யனேயென்னிட
ஆசைகலியைதீர்த்த அருமைமகனேயென்று
செப்பொணுமகிழ்ச்சியால் சீராட்டியேவளர்க்க
சிறுவர்களுடன்கூடி தெருவினில்விளையாடும்(ஆ)
பள்ளிக்கூடந்தன்னில் வாத்தியாரிடத்திலே
பலகலைகற்கவே பணங்காசுகளைதந்து
உள்ளகணக்குவித்தை விள்ளும்படியேகற்று
உலகத்தோரறியவே கலியாணஞ்செய்யவும்

பலகாலுமினைந்து பெண்ணிருக்குமிடம்
அலேந்தவர் திரிந்து
எண்ணுதுமெண்ணியே யெங்கள் மகனுக்கு
எந்தவிடத்தில்பெண் ணிருக்குமோவென்றேங்கி
பெண்ணிடதாய்தந்தை யிருக்குமிடஞ்சென்று
பிரியமாயவர்க ளிடம்போய்விசாரிக்கும் (ஆ)
சென்றிரவர்கேட்டுபின் சிறப்புடநகைகளும்
குன்றுபரியங்கள் கொடுத்திடுவோமென்ன
நன்றுநன்றென்றவர் நாள்பார்த்திடுங்களென்று
நயமாயிவருரைக்க ஜெயமாய்ச்சுதென்றிவர்
பார்ப்பானேயழைத்து சாஸ்திரம்சொல்லென்று
திர்ப்பாகயுரைத்து
ராசிபொருத்தங்கள் நட்சத்திரம்திதி
பேருக்குச்சரிபார்த்து புரோகிதர்சொன்னபின்
நாராயணனருளால் நல்லமுகூர்த்தந்தன்னில்
நாயகிகழுத்திலே நாட்டினனேதாலி (ஆ)
நகரோர்களறியவும் நமக்கினிப்பயமில்லே
நல்லபெண்சாதியும் நமக்குகிடைத்துவிட்டாள்
ஜெகத்தினில்நம்மைப்போல் சீமானுமில்லேயென்று
அகமகிழ்ந்துவார்த்தை அன்பாய்சொல்லிக்கொண்டு
உலகோரேபாரும் சகலரும்எனக்கிணே
இல்லேஎன்றுகூறும்
என்றிவன்சந்தோஷ எண்ணத்துடனேவந்து
மனம்போல்மாமியார்வீட்டில் மறுவுண்ணும்படியாக

தின்றுதொழுக்கவே நன்ருய்முகமலர்ந்து
திரேகமெங்கும்பூரித்து திரியும்உல்லாசத்தின்(ஆ)
மெய்மையாயிருந்தவன் தாய்வீடுசேர்ந்தபின்
பெண்சாதியுடன்பள்ளி யறைதனில்சேர்ந்திவர்
சையோகவேளையில் உபதேசிக்கிருள்புத்தி
தையலர்புருஷரை மயக்குதல்போலெத்தி
நாயகனுக்கு நல்லவள்போல
உபாயங்களாக
நானும்நீயுமாக தனியாயிருந்தோமானல்
நன்மையுடனேநாம் நாட்டிலுள்ளோர்காண
தேனும்தினையும்போ லிருக்கலாமென்றவள்
தலைக்காணிமந்திரம் உபதேசம்செய்திட்ட (ஆ)
இவ்விதமாயிவள் மாயமகியுரைக்க
இவன்மனதன்னேரம் இருந்தாற்போல்தடுமாறி
அவ்விதமேசெப்வேன் அடியெந்தன்கண்ணுட்டி
அரைநாழிகையுமிப்போ தங்கேனிவர்களிடம்
அன்னமேதேனே யுன்சொல்லேகுருவாக்கியம்
சொர்னமே மானே
என்றுமனமகிழ்ந்து இவளைபுகழ்ந்துகொண்டு
அன்னைதந்தையென்ற ஆசையைமறந்திவன்
சென்று அவர்களிடன் சீறிக்கோபம்செய்து
சிறிக்கும்பகைவர்காண பெருத்தசண்டைசெய்யும்()
தகப்பனைபாட்டனை தைரியத்தினுலே
இகழ்ச்சியாயேசவும் இவர்களும்நிந்திக்க

மகிழ்ச்சியுடனேபத்து மாதஞ்சுமந்துபெற்ற
மாதாவைகண்டாலோ நாய்போலவேசீறி
அவள்மனம்நடுங்க பெண்சாதிமெச்சவே
இவன்தினமுடுக்க
அதுகண்டுசுற்றத்தார் அனியாயமோவென்று
அப்பாமகனேயுன்னை அருமையாய்வளர்த்தோமே
இதுவென்னவிபரீதம் உனக்குவந்ததடா
இந்ததுர்ப்புத்தியை விட்டுவிட்டாயென்ற(ஆ)
என்றிவர்கள்சொல்ல எனக்குபுத்தியோநீங்கள்
இயம்பவந்தீர்களே என்முன்னிற்காதீர்கள்
நன்றுயிருக்குது நியாயங்கனிப்போது
நரைத்தமனிதர்களே உரத்துகத்தாதீர்கள்
நன்றல்லநீங்கள் நியாயமெனக்குச்
சொல்லாதீர்கள் போங்கள்
கோபம்வரும்போது குறுக்கநிற்காதீர்
கொடுமைவிளைத்தென்னை யிழிவாகயேசாதீர்
ஸ்தாபித்தவழக்கைபோல் சண்டைகொடுக்காதீர்
தாறுமாறுயென்னை பேசாதீரென்றிவன் (ஆ)
கிழவனும்சிழவியும் சும்மாயிருப்பதில்லை
கேளடிபெண்ணேநான் கூறுவேனொருவார்த்தை
செழிப்பாயிருக்கலாம் தேசத்தாரைப்போல
சீராகநான்சொன்ன பிரகாரமிப்போதே
தூக்கடிசட்டி பானையெடுத்துசோ
றாக்கடி எட்டி

என்றிவன்சொல்லிவாய் மூடுமுன்னேயவள்
இதுவேசமயமென்று இருந்தவர்கலங்கவே
வென்றிடும்வீரனும் சண்டைக்குவந்தாற்போல
வேறேயின்னொருவீட்டில் வாந்தார்களேகுடி (ஆ)
நீயும்நானும்வாழ நிகரில்லைநமக்கப்போ
வீடும்வாசலாச்சு வகையுடனிப்போது
சேயும்பிள்ளைகளும் நீயும்நானும்உண்ண
சம்பளவேலைக்கு போவாய்நீயிப்போதே
இன்றிவள்முடுக்கி அதட்டிமிரட்டியே
ஆர்ப்பரித்துரைக்க
என்னடா மோசங்கள் வந்ததென்றுசொல்லி
எவ்விதம்பிழைப்பேனான் இதுவென்னவிபரீதம்
என்னிட தாய்தந்தை என்னைபெற்றுவளர்த்து
இவள்கையிலொப்புவித் தாரென்றழுதிடும்(ஆ)
என்றிவன்மனம்நொந்து எண்ணுதெல்லாமெண்ணி
எங்கேயாகிலுஞ்சென்று கூலிவேலைசெய்து
ஊன்றிமனங்கலங்கி குழந்தைகுட்டிபிழைக்க
கூலிவாங்கிகொண்டு வேலையைவிட்டப்பால்
வீட்டுக்குவந்து குழந்தைகுட்டிகட்கு
சாப்பாட்டுக்காக
பெண்சாதிகைதனில் பிரியமுடனேதந்து
பிள்ளைகுட்டிகளுடன் பொல்லாவருத்தப்பட்டு
எண்சாணுடம்பிரத்தம் எல்லாம்வற்றினபிட்பு
ஏழைமனிதனென்று எவர்களும்சொல்லவும்துன்(ஆ)

கையில்பணமுமில்லாமல் கடன்காரர்தொந்தரை
காதையடைக்குது கஞ்சிதண்ணியுமில்லே
மெய்யுந்தளர்ந்துவிர்த் தாப்பியமாச்சுது
விருதாவியேயிவன் நாளெல்லாம்போச்சுது

வயதானதாலே வரவரபலமெல்லாம்
ஒடுங்கையினாலே

தள்ளாடித்தள்ளாடித் தடியையூன்றிக்கொண்டு
தலைதாடிமீசைகள் வெண்மையாய்நறைக்கவும்
பல்லுகள்விழுந்துபோல் பலருங்கிழவனென்ன
அல்லல்துன்பத்தைவிட்டு அடைந்தானெமலோகம்()

சுந்தரஜெயவீர சூரதீரகவிராஜ
கந்தசாமிபிள்ளை சொன்னதுபொய்யல்ல
தந்தைதாய்குருதெய்வம் சீர்பாதம்மறவாமல்
தருமசிந்தனையநக பிழைப்பீருலகோரே

மோசம்போகார்தீர் நமதுவாழ்நாளின்மேல்
ஆசைவையாதீர்

அந்தரத்தமரரும் கந்தநாதனும்வாழி
அய்யன்கணபதியும் ஹரியுடன்சிவன்வாழி
சந்திரசூரியர் இந்திரர்களும்வாழி
சதுர்முகனும்வாணியும் சந்தோஷமாய்வாழி (ஆ)

வானிடக்கீர்த்தனை
முற்றிற்று.